**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**

**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**

**04 மார்ச் 2016 / 24 ஜமாதியுல் அவ்வல் 1437**

# நீதமாக நடந்து கொள்வதன் முக்கியத்துவத்தை அறிதல்

اَلْحَمْدُ للهِ الْغَنِيِّ الْحَمِيْدِ وَأَشْهَدُ أَنْ لا إِلَهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لا شَرِيْكَ لَه، وَهُوَ عَلَى كُلِّ شَيْءٍ شَهِيْد، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُه المَبْعُوثُ بِالرَّحْمَةِ وَالْقَوْلِ السَّدِيْد، اَللّهُمَّ صَلِّ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَصَحْبِهِ وَسَلِّمْ تَسْلِيْمًا كَثِيْرًا. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ اللهِ اتَّقُوْا اللهَ حَقَّ تُقَاتِهِ وَلَا تَمُوْتُنَّ إِلَّا وَأَنْتُم مُسْلِمُوْن.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அருள் மிக்க ஜமாஅத்தார்களே! இப்புனிதமிக்க தினத்தில், இறைத்தூதர்(ஸல்) அவர்களின் காலத்தில் நடைபெற்ற ஒரு வரலாற்றைக் கூறி, எனது உரையை ஆரம்பிக்க விரும்புகிறேன். அவ்வரலாற்றில் நாம் ஆழமாகச் சிந்திக்கத்தக்க பல கருத்துக்கள் காணப்படுகின்றன.

ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களின் தோழர்களில் ஒருவராகிய பஷீர் (ரலி) என்பவர் தனது பிள்ளைகளில் ஒருவராகிய நுஃமான் (ரலி) என்பவருக்கு ஒரு அன்பளிப்பை வழங்கினார். பின்பு அன்பளிப்பு கொடுப்பது சம்பந்தமாக அறிவுரையைப் பெறுவதற்காக இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்களிடம் வந்தார். அப்போது ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள்: உங்களின் எல்லாப் பிள்ளைகளுக்கும் இது போன்ற அன்பளிப்பை வழங்கினீரா? எனக் கேட்டார்கள். ”இல்லை” என பஷீர் (ரலி) பதிலளித்தார்கள். அப்போது இறைத்தூதர்(ஸல்) அவர்கள்: ”அல்லாஹ்வின் மீது தக்வா (பக்தியை)

ஏற்படுத்திக் கொள்ளுங்கள்; உங்களின் பிள்ளைகளிடம் நீதமாக நடந்து கொள்ளுங்கள்" என்று கூறினார்கள். (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் அபூதாவூத் ரஹ்)

ஜமாஅத்தார்களே!
நான் தற்போது உங்களுடன் பகிர்ந்து கொண்ட வரலாற்றில் அப்படியொன்றும் பெரிய விஷயம் இல்லையே! என நம்மில் சிலர் நினைக்கலாம். ஒரு தகப்பனார் தனது பல பிள்ளைகளில் ஒருவருக்கு மட்டும் அன்பளிப்பைக் கொடுப்பது அவ்வளவு ஒன்றும் பெரிய விஷயம் இல்லையே எனக் கருதலாம். செல்வம் தகப்பனாருக்குச் சொந்தமானது; அன்பளிப்பு கொடுப்பதால் அவரது பிள்ளைக்குத் தானே பலன் கிடைக்கும் இதில் என்ன விநோதமான விஷயம் உள்ளது என நினைக்கலாம். எனினும், மேற்கண்ட சம்பவத்தில் ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் வழங்கும் உபதேசம் நீதமாக நடந்து கொள்வதன் முக்கியத்துவத்தைச் சுட்டிக் காட்டுகிறது. சிலவேளைகளில், பெற்றோர்கள் இந்த உண்மையை உணராமல் பிள்ளைகளில் சிலரை விட மற்ற சிலருக்கு முக்கியத்துவமளித்து விடுகிறார்கள். இவ்விதமான நேர்மையற்ற செயல் பிள்ளைகளுக்கிடையே வெறுப்பு, பழிவாங்கும் தன்மை, கோபம் போன்றவற்றை ஏற்படுத்தி விடும்.

இவ்விதமான நேர்மையற்ற செயல் பெற்றோர்கள் மற்றும் பிள்ளைகளுக்கு மத்தியிலான உறவில் கூட பாதிப்பை ஏற்படுத்தி விடும். தாங்கள் ஒதுக்கப்பட்டு விட்டோமோ, நம்மைப் பற்றி நமது பெற்றோருக்கு நல்ல எண்ணம் இல்லையோ எனப் பிள்ளைகள் நினைக்கத் தோன்றும். பிள்ளைகளின் தன்னம்பிக்கை மற்றும் சுயமரியாதையைப் பாதிக்கும். அறிவு மற்றும் உணர்வின் முன்னேற்றத்துக்குத் தடையாக அமையும். எனவே தான் நபி(ஸல்) அவர்கள், குறிப்பாக, குடும்பத்தாரிடையே நீதமாக நடந்து கொள்ளுமாறு வலியுறுத்திக் கூறியுள்ளார்கள். எனவேதான், "கதீப்" (பிரசங்கம் செய்பவர்) திருக்குர்ஆனின் "அந்-நஹ்ல்" எனும் அத்தியாயத்தின் பின்வரும் 90-வது வசனத்தை ஒவ்வொரு வாரமும் ஓதுவதை நீங்கள் கேட்டிருக்கலாம்:

۞ إِنَّ ٱللَّهَ يَأۡمُرُ بِٱلۡعَدۡلِ وَٱلۡإِحۡسَٰنِ وَإِيتَآيِٕ ذِي ٱلۡقُرۡبَىٰ
وَيَنۡهَىٰ عَنِ ٱلۡفَحۡشَآءِ وَٱلۡمُنكَرِ وَٱلۡبَغۡيِۚ يَعِظُكُمۡ
لَعَلَّكُمۡ تَذَكَّرُونَ ٩٠

பொருள்: நிச்சயமாக அல்லாஹ் நீதி செலுத்துமாறும், நன்மை செய்யுமாறும், உறவினர்களுக்கு கொடுப்பதையும் கொண்டு (உங்களை) ஏவுகிறான்; அன்றியும், மானக்கேடான காரியங்கள், பாவங்கள், அக்கிரமங்கள் செய்தல் ஆகியவற்றை விட்டும் (உங்களை) விலக்குகின்றான் - நீங்கள் நினைவு கூர்ந்து சிந்திப்பதற்காக, அவன் உங்களுக்கு நல்லுபதேசம் செய்கிறான்.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள ஜமாஅத்தார்களே!
ஒவ்வொரு பொருளையும் அதற்குரிய இடத்தில் வைக்க வேண்டுமென்றும், ஒவ்வொரு விஷயத்துக்கும் அதற்கான உரிமையைக் கொடுக்க வேண்டுமென்றும் நீதி, நேர்மைகள் கூறுகின்றன. நீதம் இல்லையெனில், அடக்குமுறை, கொடுமை, மற்ற தீமைகளும், அசிங்கமான நடத்தைகளுமே காணப்படும். இஸ்லாமிய ஷரீஅத் சட்டத்திலும், மனித உறவுமுறைகளிலும் நீதம் அடிப்படையான அம்சமாகும் என இமாம் அல்-குர்துபீ (ரஹ்) கூறுகிறார்கள். இது முற்றிலும் உண்மையாகும். நமது முதலாளிகளும், நமது வாழ்க்கைத் துணைகளும், நமது பெற்றோர்களும், நமது தலைவர்களும் நீதமாக இல்லையெனில் நிலைமை எவ்வளவு மோசமாக இருக்குமென்பதை எண்ணிப் பாருங்கள்! அந்நிலையில், நாம் நிச்சயம் மகிழ்ச்சியற்றவர்களாகவும் திருப்தியில்லாதவர்களாகவும் இருப்போம். எனினும், மற்றவர்கள் விஷயத்தில் எந்த அளவு நேர்மையானவர்களாக நாம் உள்ளோம் என நம்மை நாம் கேட்டு கொள்ள வேண்டும். மற்றவர்கள் நம்மிடம் கிருபையாக நடந்து கொள்ள வேண்டுமென நாம் விரும்புகிறோம்; அதே சமயம், நாம் மற்றவர்களிடம் கிருபையாக நடந்து கொள்ளவில்லையெனில் அதுவும் ஒரு வகையான கொடுமையாகவும் அநீதமாகவும் இருக்கும்.

ஜமாஅத்தார்களே! நினைவில் கொள்ளுங்கள்!

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா நீதத்துக்கு அதிக முக்கியத்துவமளிக்கின்றான். அல்லாஹ் கூறுவதாக நபி(ஸல்) கூறும் ஹதீது குத்ஸி ஒன்றில் அல்லாஹ் கூறுகின்றான்:

"என்னுடைய அடியார்களே! அநீதம் செய்வதை எனக்கு நானே தடை செய்துள்ளேன். எனவே, உங்களுக்கிடையே அநீதம் செய்யப்படுவதும் தடை செய்யப்பட்டுள்ளது. எனவே நீங்கள் மற்றவர்களுக்கு அநீதம் செய்பவர்களாக இருக்காதீர்கள்" (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் முஸ்லிம் ரஹ்)

நீதமாகிறது, சரியானதைச் செய்யுமாறு கூறுகிறது. எதைச் செய்வதை அவசியமென நாம் கருதுகிறோமோ அதைச் செய்யுமாறு கூறவில்லை. உண்மையைப் பற்றிப் பிடிப்பதில் விடாப்பிடியுடனும் அதனைச் செயல்படுத்துவதில் துணிச்சலாகவும் இருக்குமாறு நீதம் கூறுகிறது. நாம் நீதமாக நடந்தால் பல விஷயங்களை நாம் இழந்து விடுவோம் எனச் சிலர் கூறலாம். நீதமாக நடந்தால் சில விஷயங்களை நாம் இழப்பது போல் நமக்குத் தென்படும்; ஆனால், நீதமாக நடந்தால் நமக்கு நிரந்தரமான நிம்மதி கிடைக்கும்; இரவில் நாம் நிம்மதியாகத் தூங்கலாம் என்பதை உறுதியாக நம்புங்கள். நீதம் செய்வது நமது உள்ளங்களில் "தக்வா" (இறை பக்தியை) உறுதியாக்கும். அல்லாஹ்வின் மீது "தக்வா" வை ஏற்படுத்திக் கொள்வதானது, சாந்தி, சமாதானம் மற்றும் உண்மையான மகிழ்ச்சியின் பால் அழைத்துச் செல்லும். அல்லாஹ் கூறுகிறான்:

اَعْدِلُوْا هُوَ اَقْرَبُ لِلتَّقْوٰى وَاتَّقُوا اللّٰهَ اِنَّ اللّٰهَ خَبِيْرٌ بِمَا تَعْمَلُوْنَ ﴿٨﴾

பொருள்: நீதி செய்யுங்கள்; இதுவே (தக்வாவுக்கு) - பயபக்திக்கு மிக நெருக்கமாகும்; அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்; நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை(யெல்லாம் நன்கு) அறிந்தவனாக இருக்கின்றான்.

நம்மில் சிலர், நான் ஒருபோதும் அநீதமாக நடந்ததில்லை எனக் கூறுவார். பின்பு அவர் இவ்விஷயத்தைக் கவனத்தில் கொள்பவராக இருக்கமாட்டார். ஜமாஅத்தார்களே! நீதமாக நடப்பதும், அநீதத்தைத் தவிர்ப்பதும் செயலில் மட்டுமல்ல, ஒவ்வொரு ”முஃமின்” (ஓரிறை நம்பிக்கையாளர்) செயல், சொல், உறவுமுறைகள் அனைத்திலும் நீதத்தைப் பின்பற்ற வேண்டுமென இஸ்லாம் கூறுகிறது. நீதமாக நடந்து கொள்வது மனிதர்களிடம் மட்டுமல்ல, அல்லாஹ்வின் அனைத்து படைப்புகளிடமும் நீதமாக நடந்து கொள்ள வேண்டும். இன்ஷாஅல்லாஹ், இம்மாதத்தின் இனி வரும் ஜும்ஆப் பிரசங்கங்களில் இக்கருத்து மேற்கொண்டு விவாதிக்கப்படும்.

சமுதாயத்தின் நேர்மையான உறுப்பினர்களாக ஆகுவதற்கும், எல்லா விஷயத்திலும் நேர்மையாக இருந்து, ஒழுக்க மாண்புகளைப் பற்றிப் பிடிப்பவர்களாக ஆகுவதற்கும் கடின முயற்சி செய்வோமாக! எல்லாம் வல்ல அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா நமக்கும் நமது குடும்பத்தார்களுக்கும் மன்னிப்பை வழங்குவானாக! அவனது அருள் மாரியைப் பொழிவானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

بَارَكَ اللهُ لِي وَلَكُمْ فِي الْقُرْآنِ الْعَظِيْمِ، وَنَفَعَنِي وَإِيَّاكُمْ بِمَا فِيْهِ مِنَ الآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيْمِ، وَتَقَبَّلَ مِنِّي وَمِنْكُمْ تِلَاوَتَهُ إِنَّهُ هُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ، أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ الْعَظِيْمَ لِي وَلَكُمْ، وَلِسَائِرِ الْمُسْلِمِيْنَ وَالْمُسْلِمَاتِ، وَالْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنَاتِ، فَاسْتَغْفِرُوهُ فَيَا فَوْزَ الْمُسْتَغْفِرِيْنَ وَيَا نَجَاةَ التَّائِبِيْنَ.